கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,
பெரியகுளம்

ம.சா. 1 நாள் 08.11.2024

வழக்கு எண் **MCOP No.196/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருக்குமரன் | ஊர் | : | மேல்மங்கலம் |
| தகப்பனார் பெயர் | : | நாகராஜன் | தாலுகா | : | பெரியகுளம் |
| தொழில் | : | லாரி டிரைவர் | வயது | : | 36/2024 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>மனுதாரர் தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 1ம் மனுதார் ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நிருபண பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இவ்வழக்கின் விபத்து சம்பந்தமாக திருநெல்வேலி மானூர் காவல் நிலைய குற்ற எண் 232/2020 ஆக TN-60AF-2106 பதிவு எண் கொண்ட மினி லாரியின் ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்ட **முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் மசாஆ 1**. TN-90D-5134 பதிவு எண் கொண்ட லாரியின் **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் மசாஆ 2**. மேற்படி மானூர் காவல் நிலைய குற்ற எண் 232/2020 வழக்கில் JM-V, திருநெல்வேலி நீதிமன்றத்தின் **Charge Alteration Report சான்றிட்ட நகல் மசாஆ 3**. மேற்படி TN-90D-5134 பதிவு எண் கொண்ட லாரியின் இன்சூரன்ஸின் **பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் மசாஆ 4**. இறந்த எனது தம்பி ஓட்டிச் சென்ற **மினி லாரியின் இன்சூரன்ஸ் பாலிசி நகல் மசாஆ 5**. எனது தம்பி கார்த்திக்கின் **ஓட்டுநர் உரிமத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் மசாஆ 6** (மசாஆ 6 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) எனது **தாயார் செல்வியின் இறப்பு சான்றிதழின் நகல் மசாஆ 7**. எனது தந்தை **நாகராஜனின் இறப்பு சான்றிதழின் நகல் மசாஆ 8**. எனது

தந்தையின் **வாரிசு சான்றிதழின் நகல் மசாஆ 9**. எனது **தம்பி கார்த்திக்கின் இறப்பு சான்றிதழின் நகல் மசாஆ 10**. (மசாஆ 10 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 16.03.2023 தேதியில் **பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையின் நகல் மசாஆ 11**. **1 முதல் 3 மனுதாரர்களின் ஆதார் மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் மசாஆ 12 மற்றும் 13 ஆகும்**. (மசாஆ 12 மற்றும் மசாஆ 13 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). மனுவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும்.

(2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
8.11.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.